## <u>தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்</u>

**முன்னிலை. திருP.சிவஞானம், எம்.ஏ., எம்.எல்.,**
**தலைமை தாங்கும் அலுவலர்,**
**காஞ்சீபுரம்.**

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30ம் நாள் புதன்கிழமை

**I.A.No.05/2023**
**IN**
**I.D.No.13/2021**

நிர்வாகம்,
Perfect Electric & Electronics
Private Limited,
எண்.4408, 17வது தெரு,
விடுதலை நகர்,
S.கொளத்தூர்,
சென்னை- 600 129. ...... மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிராக/

D.ஞானசேகர்,
த/பெ.தாமோதரன்,
எண்.243, 6வது பிளாக், 9வது மெயின் ரோடு,
கண்ணதாசன் நகர்,
சென்னை - 600 118. ...... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனு கடந்த 16.08.2023 அன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.T.ஈஸ்வரதாஸ், திரு.P.ஜோசப், திரு.P.அசோக்குமார் மற்றும் திரு.M/S.ரம்மியஸ்ரீ ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு இது நாள் வரையில் பரிசீலனையில் இருந்த பின் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

1. I.D.13/2021 என்ற வழக்கை மறு திறப்பு செய்யவும், வழக்கில் ஆவணங்களை தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டுமென்று கோரி தொழிற்தகராறு சட்டப்பிரிவு 11(3) and U/S.151 of CPC ன்கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்**

மனுதாரருக்கு எதிராக எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள தொழிற்தகராறு வழக்கில் எதிர்மனுதாரரை சட்டத்திற்கு புறம்பான முறையில் பணி நீக்கம் செய்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எதிர்மனுதாரர் தான் கடந்த 01.03.2019 தேதி முதல் பணிக்கு வராமல் நின்றுவிட்டார். அன்றைய தினம் சில அடியாட்களுடன் வந்து நிர்வாகத்தரப்பில் உள்ளவர்களை மிரட்டிய நிலையில் அன்றைய தினம் எதிர்மனுதாரர் தன்னுடைய ராஜினாமா கடிதத்தை கொடுத்துவிட்டு சென்றுவிட்டார். அந்த ராஜினாமா கடிதம் மனுதாரர் தரப்பில் ஏற்கனவே நி.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் சாட்சியம் அளிக்கும் போது மேற்படி ராஜினாமா கடிதத்திலுள்ள கையொப்பத்தை மறுத்து சாட்சியம் அளித்துள்ளார். 01.03.2019 தேதியில் ராஜினாமா கடிதத்தை கொடுத்துவிட்டு அதன் பிறகு பணிக்கு வராமல் நின்றுவிட்டார். ஆனால் மோசடியான முறையில் உண்மையை மறைத்து அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்று சாட்சியம் அளித்த நிலையில் ஏற்கனவே சமரச அலுவலர் முன்பு நடைபெற்ற விசாரணையில் Ex.A4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் அவர் சொந்த கையெழுத்தையே மறுப்பு தெரிவித்த நிலையில் மனுதாரருக்குத்தான் அந்த கையொப்பத்தை நிரூபிக்கப்பட வேண்டிய பொறுப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் 01.03.2019 தேதியிட்ட எதிர்மனுதாரரின் ராஜினாமா கடிதத்திலுள்ள கையெழுத்தை அவரது மற்ற ஒப்புக்கொண்ட கையொப்பத்துடன் ஒப்பீடு செய்து அறிக்கை பெறுவதற்காக கைரேகை நிபுணருக்கு அனுப்பப்பட

வேண்டியுள்ளது. இதனால் வழக்கு காலதாமதப்படும் என்று கருத முடியாது. எனவே இந்த தொழிற்தகராறு வழக்கில் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வழக்கை மறு திறப்பு செய்ய உத்தரவிட வேண்டும்.

## 3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படியும், சங்கதிகள்படியும் நிலைக்கக்கூடியதாக இல்லை. ஏற்கனவே எதிர்மனுதாரரை மனுதாரர் தரப்பில் கடந்த 27.04.2022 மற்றும் 09.10.2022 ஆகிய இரண்டு தேதிகளில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். மனுதாரர் தரப்பு வழக்கினை நிரூபிக்கும் வகையில் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. 01.03.2019 தேதியிட்ட ராஜினாமா கடிதத்தை எதிர்மனுதாரர் கொடுத்தார் என்பது மறுக்கப்படுகின்றது. வழக்கிற்காக இந்த சங்கதி உருவாக்கப்பட்டுள்ளது. நிர்வனத்தின் ஆட்களையோ அல்லது நிர்வாக ஊழியர்களையோ எதிர்மனுதாரர் மிரட்ட முடியாது. 01.03.2019 தேதியிட்ட ராஜினாமா கடிதத்திலுள்ள கையொப்பத்தை மறுத்ததற்கு காரணமானது மனுதாரர் தான் எதிர்மனுதாரரை பணி நீக்கம் செய்யப்பட்டுவிட்டார். எதிர்மனுதாரர் கையொப்பத்தினை மறுக்கவில்லை. ஆனால் இந்த இடைக்கால மனுவினை தான் அனுமதிக்கக்கூடாது என்று ஆட்சேபனை செய்கின்றார். மனுதாரர் மட்டுமே அந்த கையொப்பத்தை உண்மை என்று நிரூபிக்க வேண்டும். இந்நிலையில் இந்த இடைக்கால மனு வழக்கிற்கு தேவை இல்லாததாகும். காலம் கடத்தும் நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கையொப்பத்தை ஆராய்ந்து அறிக்கை கொடுக்க வேண்டும் என்பதற்காக நீதிமன்ற ஆணையரை நியமிக்க வேண்டுமென்று கோருவது வழக்கை காலம் கடத்தும் செயலாகும். ஏற்கனவே எதிர்மனுதாரரின் சாட்சியை குறுக்கு விசாரணைக்கு பிறகு உடனே இது குறித்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதனால் வழக்கை காலம் கடத்தும் நோக்கத்தில் செயல்படும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

## 4. மனுதாரர் கோரியவாறு இம்மனு அனுமதிக்கக்கூடியதா ?

<u>**தீர்வு**</u>

5. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரரிடம் எதிர்மனுதாரர் பிட்டராக வேலை செய்து வந்ததாகவும், 01.03.2019 தேதியில் எந்தவிதமுன் அறிவிப்பின்றி திடீரென்று பணி நீக்கம் செய்துவிட்டதாகவும், அந்த பணி நீக்கம் சட்டவிரோதம் என்பதால் மீண்டும் வேலை வழங்க உத்தரவு செய்யப்பட வேண்டுமென்று எதிர்மனுதாரர் தொழிற்தகராறு வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் எதிர்மனுதாரர்/தொழிலாளி தரப்பில் ஏற்கனவே WW1 சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. நிர்வாகத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நிலையில் அத்துடன் தொழிலாளி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டு நிர்வாகத்தரப்பில் MW1 சாட்சியம் அளிக்கப்பட்ட நிலையில் மேற்படி சாட்சியம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு அத்துடன் சாட்சிகள் விசாரணை முடித்து வழக்கில் எதிர்மனுதாரர்/ தொழிலாளி தரப்பில் வாதுரையும் செய்யப்பட்டுள்ளது. எழுத்துமூல வாதுரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/நிர்வாகத்தரப்பு வாதுரை செய்வதற்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே எதிர்மனுதாரரை மனுதாரர் பணி நீக்கம் செய்ததாக கூறுவது உண்மையில்லை என்றும் ஆனால் எதிர்மனுதாரர் தான் 01.03.2019 தேதியில் ராஜினாமா கடிதத்தை கொடுத்துவிட்டு சென்றுவிட்டார் என்றும் அதன் பிறகு வேலைக்கு வரவில்லை என்றும் அதனால் சட்டவிரோதமான பணி நீக்கம் என்பது தவறு என்று மனுதாரர்/நிர்வாகத்தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. இது குறித்து நிர்வாகத்தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. ஆவண சாட்சியங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. WW1 ஆக விசாரிக்கப்பட்ட தொழிலாளி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும் போது அவர் ராஜினாமா செய்வதாக கொடுத்த கடிதத்தை காட்டிய போது அவருடைய கையெழுத்தை மறுத்து அதில் உள்ள கையொப்பம் அவருடையதில்லை என்று மறுத்துவிட்டதாகவும் அதனால் அந்த கையெழுத்து அவருடையது தான் என்று நிரூபிக்க வேண்டிய கடமை மனுதாரருக்கு உண்டு என்றும் அந்த வகையில் எதிர்மனுதாரர் மனுதாரர்/நிர்வாகத்திடம் கொடுத்த ராஜினாமா கடிதம் ஏற்கனவே நி.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்ட நிலையில்

அதில் உள்ள கையொப்பம் எதிர்மனுதாரருடையது தான் என்று நிரூபிக்கும் வகையில் அவரால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணங்களின் கையொப்பத்துடன் ஒப்பீடு செய்து கைரேகை நிபுணர் அறிக்கை பெறுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது என்றும் அந்த வகையில் அந்த அசல் ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்து குறியீடு செய்வதற்க்காக வழக்கினை மறு திறப்பு செய்ய வேண்டுமென்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் நி.த.சா.ஆ.3 கடிதத்திலுள்ள கையொப்பத்தை தன்னுடையது இல்லை என்று மறுத்துவிட்ட நிலையில் அது குறித்து நிர்வாகத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியத்தின் மூலமாக அந்த ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் இது தவிர அந்த ஆவணத்திலுள்ள கையொப்பம் உண்மையானதா? போலியானதா? என்பதை நிரூபிக்கும் வகையில் நிர்வாகத்தரப்பில் சாட்சி விசாரணை செய்வதற்கு முன்பே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றும் சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்ட பிறகு வழக்கை காலம் கடத்தும் நோக்கத்தில் இந்த மனு தாக்கல் செய்திருப்பதாக எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது.

6. ஏற்கனவே இந்த மனுதாரர் தரப்பில் I.A.1/2022 மற்றும் I.A.2/2022 ஆகிய இரண்டு இடைக்கால மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது. மேலும் WW1-ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கை மறு திறப்பு செய்யப்பட வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது. 28.09.2022 தேதியில் இம்மனு அனுமதிக்கப்பட்டு வழக்கு மறு திறப்பு செய்யப்பட்டு தொ.த.சா.1 சாட்சியை மேலும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அதன்படி கடந்த 19.10.2022 தேதியில் தொ.த.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் மேலும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு அன்றைய தினம் நி.த.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு 07.12.2022 தேதியில் நிர்வாகத்தரப்பில் அதன் இயக்குநர் நி.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு முதல் விசாரணையில் தன்னுடைய பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டும் நி.த.சா.ஆ.2 முதல் 5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 09.01.2023 தேதியில் நி.த.சா.1 சாட்சியை எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு தொ.த.சா.ஆ.

8 குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு மேற்கொண்டு விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று நிர்வாகத்தரப்பில் முடிக்கப்பட்ட நிலையில் மீண்டும் தொ.த.சா.1ஆக விசாரிக்கப்பட்ட சாட்சியை மேலும் குறுக்கு விசாரணை செய்வதற்க்காக வழக்கு மறு திறப்பு செய்யப்பட வேண்டுமென்று கேட்டு I.A.3/2022 மற்றும் I.A.4/2022 என்ற இரண்டு இடைக்கால மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த இடைக்கால மனுக்கள் கடந்த 01.03.2023 தேதியில் விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 23.03.2023 தேதியில் தொழில்தகராறு வழக்கில் எதிர்மனுதாரர்/தொழிலாளி தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. எழுத்து மூல வாதுரை தாக்கல் செய்யப்பட்டது. மனுதாரர்/நிர்வாக தரப்பு வாதுரைக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே தொ.த.சா.1 சாட்சியிடம் நிர்வாகத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது நி.த.சா.ஆ.3ல் உள்ள கையெழுத்தை காட்டி கேட்ட போது அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்று மறுத்துள்ளார். அதன் பிறகு நி.த.சா.1 சாட்சியம் மூலமாக அந்த ஆவணம் நி.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் அந்த கையொப்பம் உண்மையானதா? இல்லையா? என்பதை ஆராய்வதற்காக கைரேகை நிபுணர் பரிசோதனைக்கு அனுப்பி அறிக்கை பெறும் நோக்கத்தில் அந்த ஆவணங்களை தாக்கல் செய்வதற்க்காக வழக்கு மறு திறப்பு செய்ய வேண்டுமென்று இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. நி.த.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள 01.03.2019 தேதியிட்ட ராஜினாமா கடிதத்தின் Xerox நகல் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட நிலையில் தற்போது அந்த அசல் தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டுமென்று இந்த மனுவில் மனுதாரர் கோரியுள்ளார். அதே போல் எதிர்மனுதாரருடைய 2017 பிப்ரவரி மாதத்தின் அசல் சம்பள சிலிப் தாக்கல் செய்வதற்காக வழக்கு மறு திறப்பு செய்யப்பட வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது. ஏற்கனவே 2019 பிப்ரவரி மாதத்திற்கான எதிர்மனுதாரரின் சம்பள சிலிப் Xerox நகல் நி.த.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்/ நிர்வாகத்தரப்பு மனுவில் கோரியவாறு ஏற்கனவே நி.த.சா.ஆ.3 மற்றும் 5 குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அசல்களை தாக்கல் செய்வதற்காக மறு திறப்பு செய்ய

வேண்டுமென்று கோரினாலும் இந்த ஆவணங்களின் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுவிட்ட நிலையில் மீண்டும் இந்த ஆவணங்களை குறியீடு செய்யப்பட வேண்டுமென்று கோர முடியாது. கூடுதல் ஆவணங்களாக குறியீடு செய்வதற்காக வழக்கை மறு திறப்பு செய்ய வேண்டுமென்று மனுதாரர் தரப்பில் கோருவதற்கு சரியான காரணங்களை தெரிவிக்கவில்லை. ஏனென்றால் 01.03.2019 தேதியிட்ட ராஜினாமா கடிதத்திலுள்ள கையொப்பத்தை ஆராய்வதற்காக கைரேகை நிபுணர் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டு அறிக்கை பெறுவதற்காக இந்த ஆவணங்களை குறியீடு செய்ய கோரினாலும் அவ்வாறு கைரேகை நிபுணர் அறிக்கை பெறுவதற்கான நடவடிக்கையை மனுதாரர் தரப்பில் இது வரை எடுக்கவில்லை. மேலும் ஏற்கனவே I.A.1/2022 மற்றும் I.A. 2/2022 என்ற இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் படி தொ.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டவரை மேலும் குறுக்கு விசாரணை செய்வதற்காக மறு திறப்பு செய்வதற்கு கோரிய நிலையில் அம்மனுக்கள் அனுமதிக்கப்பட்டது. அதன் பிறகு I.A.3/2023 மற்றும் I.A.4/2023 ஆகிய இரண்டு இடைக்கால மனுக்களை தாக்கல் செய்யப்பட்டு அதில் தொ.த.சா.1 யை மேலும் குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கை மறு திறப்பு செய்யப்பட வேண்டுமென்று கோரிய நிலையில் அந்த மனுக்கள் விசாரணைக்கு பிறகு தகுதியின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே இரண்டு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்ட நிலையில் எதிர்மனுதாரர்/தொழிலாளி தரப்பில் வாதுரையும் செய்யப்பட்டுவிட்ட நிலையில் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வழக்கு மறு திறப்பு செய்யப்பட வேண்டுமென்று கோருவது காலம் கடத்தும் நோக்கத்தில் உள்ளதாக தோன்றுகிறது. ஆகவே இந்த மனுவை அனுமதிப்பதற்கு மனுதாரர் தரப்பில் போதிய காரணங்களை தெரிவிக்கப்படவில்லை என்பதினாலும் தொழிற்தகராறு விசாரணை முடிந்து வாதுரை செய்யப்பட்டு வழக்கு முடியும் தருவாயில் உள்ள காரணத்தினால் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்யப்பட வேண்டுமென்று கோருவதற்கு போதுமான காரணங்கள் இல்லை என்பதாலும் இந்த ஆவணங்களின் நகல்கள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுவிட்ட காரணத்தினாலும் வழக்கை மறு திறப்பு செய்யப்பட வேண்டும்

என்பதற்கு போதுமான காரணங்கள் இல்லை என்றே முடிவு செய்யப்படுகிறது. அந்த வகையில் இந்த மனுவை அனுமதிக்க போதிய காரணங்கள் இல்லை என்று முடிவு செய்து தள்ளுபடி செய்யப்படுகிறது.

**முடிவாக இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எழுதி விரிவாக்கம் செய்து கணினி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2023ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- P.சிவஞானம்,
தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சீபுரம்.

// உண்மை நகல் //

P SIVAGNANAM

Presiding Officer,
Labour Court
Digitally signed by P SIVAGNANAM
Location: Kancheepuram
Date: 2023.08.30 17:24:11 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சீபுரம்.